DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : வளையாபதி (P.w.4)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2013ம் வருடம் எனது ஊரிலிருந்து திருச்சுழிக்கு சாமான்கள் வாங்குவதற்கு வந்துவிட்டு, திரும்ப 3.30 மணிக்கு திருச்சுழியில் எனது ஊருக்கு செல்வதற்கு நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். பேருந்தில் ரெகுநாதமடை, ஆனைகுளம், குழலிகுளம், காத்தான்பட்டி, அம்மன்பட்டி ஆகிய ஊரை சேர்ந்த நபர்கள் பேருந்தில் இருந்தார்கள். சுமார் 3.45 மணியளவில் கமுதி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சாமிநத்தத்திற்கும், பனையூருக்கும்

நடுவில் பேருந்த சென்றபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாக வந்த லாரியானது, பஸ்சிற்கு முன்பக்கம் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. அதில் எனக்கு தலை மற்றும் வலதுகையில் காயம் ஏற்பட்டது. பேருந்தில் இருந்த 30–40 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னையும், காயம்பட்ட மற்ற நபர்களையும் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள், அங்கு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பேருந்தின் நடத்துனர் லாரி மோதியதில் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து கீழே விழுந்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். இரண்டு மாதங்கள் கழித்து சிகிச்சையிலிருந் வீட்டிற்கு வந்துவிட்டேன். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1. பேருந்தில் சுமார் 60–70 பேர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் பேருந்தின் வலதுபுறம் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தேன். நான் பயணம் செய்த பேருந்து விபத்து ஏற்பட்ட பின்னர்தான் விபத்து ஏற்பட்டது தெரியுமா என்றால் இல்லை, எதிரி வேகமாக வந்து லாரி மோதிவிட்டது. நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பெயர்கள் தெரியாது. விபத்து ஏற்பட்ட அவசரத்தில் லாரியை யார் ஓட்டி வந்தார் என்றால் தெரியும். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, போலீசார் என்னை விசாரிக்க மட்டும் செய்தார்கள். எதிரியின் பெயர், அவர் அப்பா பெயர் எனக்கு தெரியாது. நான் பயணம் செய்த பேருந்தினால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுநரின்

கவனகுறைவினால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : செல்வபாண்டி (P.w.5)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 2013ம் வருடம் சொந்த வேலையாக நான் திருச்சுழி வந்துவிட்டு, எனது ஊருக்கு செல்வதற்காக திருச்சுழியில் அரசு பேருந்தில் சுமார் 3.30 மணியளவில் ஏறி சென்றேன். பேருந்தில் பனையூர், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். பனையூருக்கும் – சாமிநத்தத்திற்கும் இடையே திருச்சுழி – கமுதி செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக பேருந்து சென்று

கொண்டிருந்தபோது, 3.45 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்த லாரியானது பேருந்தின் முன்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு தலை, இடதுபக்க நெற்றி, மூக்கு, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனக்கும், பேருந்தில் வந்த 30 பேருக்கும் மேல் காயம் ஏற்பட்டது. என்னையும் காயம்பட்ட நபர்களையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிசிக்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 10நாள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். பேருந்தின் நடத்துனர் விபத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1. நான் 3.30 மணிக்கு திருச்சுழியில் வைத்து பஸ் ஏறினேன். எத்தனை பேர் பேருந்தில் இருந்தார்கள் என்றால் 60 பேர் இருந்திருப்பார்கள். நான் பேருந்தில் வலதுபக்க இருக்கையில் பின்பக்கம் அமர்ந்திருந்தேன். முன் இருக்கைகளில் அமர்ந்திருந்த ஆட்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்தின்போது நான் முன்னால் இருந்த கம்பியில் மோதியதில் எனக்கு காயம் ஏற்பட்டது. அதன்பின்னர் தான் பஸ் மோதியது தெரியும் என்றால், பஸ் மோதும்போது தெரியும். விபத்தானது கிழமேல் ரோட்டிற்கு வலதுபக்கம் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை, இடதுபக்கம்தான் விபத்து ஏற்பட்டது. பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பெயர் தெரியாது. லாரி ஓட்டியவரின் பெயர், அவரது அப்பா பெயர் தெரியாது. விபத்திற்கு பேருந்தின் ஓட்டுநர் தான் காரணம் என்றாலும், விபத்திற்கு

லாரி ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சரத்குமார் (P.w.6)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 09.12.2013ம் தேதியன்று நான் அருப்புக்கோட்டையில் கல்லூரியை முடித்து விட்டு, ஊருக்கு வருவதற்காக அருப்புக்கோட்டையில் பகல் 2.55 மணியளவில் நத்தகுளம் அரசு பேருந்தில் ஏறினேன். பேருந்தில் பனையூர், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். பனையூருக்கும் – சாமிநத்தத்திற்கும் இடையே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பேருந்து சென்று கொண்டிருந்தபோது, கிழக்கிலிருந்து மேற்காக வேகமாக வந்த

லாரியானது பஸ்சின் முன்பக்கம் மோதிவிட்டது. அதனால் எனக்கு வாய், வலதுபக்க நெஞ்சுபகுதி, இரண்டு கால் முட்டியிலும் காயம் ஏற்பட்டது. என்னை போன்று பேருந்தில் வந்த எனது ஊரை சேர்ந்த 20 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. என்னையும் காயம்பட்ட நபர்களையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிசிக்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 3 நாட்கள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். பேருந்தின் நடத்துனர் விபத்தில் மறுநாள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1.பேருந்தில் மொத்தம் எத்தனை பேர்கள் பயணம் செய்திருப்பார்கள் என்றால் 50பேர் பயணம் செய்திருப்பார்கள். நான் பேருந்தின் இடதுபக்கம் நடுபகுதியில் இருக்கையில் அமர்ந்திருந்தேன். பேருந்தில் எத்தனை பேர்கள் நின்று கொண்டிருந்தனர் என்றால் யாரும் நிற்கவில்லை. விபத்து நடந்தபோது அந்த ரோடு ஒருவழி பாதை என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு 5 லாரிகள் எங்களை கடந்து சென்றது என்பது தெரியுமா என்றால் தெரியாது, ஒரு லாரிதான் எதிரில் வந்தது. நாங்கள் சென்ற பேருந்து எந்த வேகத்தில் சென்று கொண்டிருந்ததோ, விபத்து ஏற்படும்போதும் அதே வேகத்தில்தான் சென்றது என்றால், லாரி வரும்போது மெதுவாகதான் பேருந்து சென்றது. பேருந்தை இடதுபுறம் ஓட்டுநர் நிறுத்தவில்லை, சென்று கொண்டுதான் இருந்தார். லாரியில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்தவுடன் நான் மயங்கிவிட்டேன், சிறிது நேரத்தில் தண்ணீர் கொடுத்து எழுப்பிவிட்டார்கள். விபத்திற்கு பேருந்தின்

ஓட்டுநர் தான் காரணம் என்றாலும், விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : முருகானந்தம் (P.w.7)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 13 வருடத்திற்கு முன்பு திருச்சுழிக்கு வீட்டு சாமாமன்கள் வாங்க வந்துவிட்டு, நத்தகுளம் அரசு பேருந்தில் திருச்சுழியில் 3.30 மணியளவில் ஏறினேன். என்னுடன் பேருந்தில் பனையூர், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். பனையூருக்கும் மேற்கே – பிள்ளையார்நத்தத்திற்கும் கிழக்கே நான் சென்ற பேருந்து 3.45 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற பேருந்தின் மீது

கிழக்கிலிருந்து மேற்காக வேகமாக வந்த லாரியானது பேருந்தின் முன்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. அதனால் எனக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டதால் வலது கையை ஊண்டியதால் வலது கையில் காயம் ஏற்பட்டது. என்னை போன்று பேருந்தில் வந்த 30 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. என்னையும் காயம்பட்ட நபர்களையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல்சிசிக்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 8 நாட்கள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். பேருந்தின் நடத்துனர் கீழே விழுந்து மறுநாள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1.நான் திருச்சுழியிலிருந்து பேருந்தில் ஏறினேன். இடதுபக்கம் முன்னால் அமர்ந்திருந்தேன். நான் பேருந்தின் டிரைவரோடு பேசிக் கொண்டு இருந்தேன் என்றால் சரியல்ல. பேருந்தின் டிரைவரை சுற்றி எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 பேர்கள் பேருந்தில் வரிசையாக இருந்தார்கள். டம் என்று சத்தம் கேட்டுதான் விபத்து நடந்த விசயம் தெரியும் என்றால் சரிதான். பேருந்து விபத்து ஏற்பட்டவுடன் எந்த திசையில் இருந்தது என்றால் இரண்டு வாகனமும் எதிர் எதிரே தான் இருந்தது, லாரி வேகமாக வந்து மோதிவிட்டது. லாரி என்ன கம்பெனி என்று எனக்கு தெரியாது. அதில் என்ன பொருட்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பெயர் தெரியாது. லாரி ஓட்டியவரின் பெயர், அவரது அப்பா பெயர் தெரியாது.

விபத்திற்கு பேருந்தின் ஓட்டுநர் தான் காரணம் என்றாலும், விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : அமராவதி (P.w.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 13 வருடத்திற்கு முன்பு திருச்சுழிக்கு வீட்டு சாமான்கள் வந்துவிட்டு, ஊருக்கு செல்வதற்காக நத்தகுளம் அரசு பேருந்தில் 3.30 மணியளவில் திருச்சுழியில் ஏறினேன். என்னுடன் பேருந்தில் பனையூர், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். நான் சென்ற பேருந்து பனையூருக்கும் முன்பு 3.45 மணியளவில் சென்றபோது, முன்னாடி ஒரு லாரி வேகமாக வந்து அரசு பேருந்தில் மோதியதில் எனக்கு வலது தோள்பட்டை, வலது காலில் காயம் ஏற்பட்டது. என்னை போன்று பேருந்தில் வந்த 40 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என்னையும், அதிககாயம் பட்ட நபரைகளையும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான்

10 நாட்கள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். லேசான காயம்பட்டவர்களை திருச்சுழி அரசு மருத்துவமனையிலும், அதன்பிறகு மேல்சிசிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையிலும் சேர்த்தார்கள். பேருந்தின் நடத்துனர் கீழே விழுந்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபரா என்று தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1.பேருந்தில் 60–70 பேர்கள் பயணம் செய்தார்கள். 40பேர் நின்றுகொண்டு வந்தார்களா என்றால் வந்திருப்பார்கள். கிராமத்திற்கு செல்லக்கூடிய பேருந்து என்பதால், 7,8 ஊர்களை சேர்ந்தவர்கள் பேருந்தில் வந்தார்கள் என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததால் ஓட்டுநர் பேருந்தை இடதுபுறமாக ரோட்டை விட்டு இறங்காமல்தான் சென்றது என்றால் சரிதான். நான் பேருந்தின் 4வது இருக்கையில் அமர்ந்திருந்தேன். பேருந்தும், லாரியும் ஒன்றுக்கொன்று மோதும்போதுதான் விபத்து தெரியும் என்றால் இல்லை, லாரி எதிரில் வரும்போதே பார்த்துவிட்டேன். லாரி என்ன கலர் என்று எனக்கு தெரியவில்லை. லாரி மோதியவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. மயக்கம் ஏற்பட்டதால் 2 நாட்கள் கழித்துதான் முழித்தேன். விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பாப்பா (P.w.9)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 13 வருடத்திற்கு திருச்சுழியில் சாமான்கள் வாங்குவதற்கு திருச்சுழிக்கு வந்துவிட்டு, திருச்சுழியிலிருந்து ஊருக்கு செல்வதற்கு நத்தகுளம் அரசு பேருந்தில் 3.30 மணியளவில் ஏறினேன். என்னுடன் ஆனைகுளம், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். பனையூருக்கும் மேற்கே பேருந்து சென்று கொண்டிருந்தபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்த லாரியானது நான் சென்ற பேருந்தின் முன்பக்கம் மோதிவிட்டது. அதில் எனக்கு வலதுபக்க நெற்றி, வலதுகால் முட்டி ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. என்னை போன்று பேருந்தில் வந்த 30 நபர்களுக்கு மேல் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட

என்னையும், அதிககாயம் பட்ட நபரைகளையும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 15 நாட்கள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். லேசான காயம்பட்டவர்களை திருச்சுழி அரசு மருத்துவமனையிலும், அதன் பிறகு மேல்சிசிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையிலும் சேர்த்தார்கள். பேருந்தின் நடத்துனர் கீழே விழுந்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அரசு பேருந்து மீது மோதிய லாரியை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1.பேருந்தில் 40பேர் இருந்தோம். நான் முன்பக்க இருக்கையில் அமர்ந்திருந்தேன். நான் சென்ற பேருந்து ரோட்டின் இடதுபக்கமாக சென்றதா என்றால், பேருந்து நேராக சென்றது, எதிரில் வந்த லாரி அருகில் வந்தவுடன் பேருந்தின் மீது மோதியது. லாரியின் கலர், பெயர், லாரியில் என்ன இருந்தது என்றால் எனக்கு தெரியாது. லாரியின் ஓட்டுநர் பெயர், அவரது அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பேருந்தின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் கவனகுறைவுதான் காரணம் என்றாலும், விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 58 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ராமுகண்ணு (P.w.10)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of February 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

1. நான் நத்தகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு ஞாபகமில்லை. சுமார் 13 வருடத்திற்கு முன்பு திருச்சுழிக்கு வந்துவிட்டு, நத்தகுளம் அரசு பேருந்தில் ஊருக்கு செல்வதற்காக 3.00 மணியளவில் திருச்சுழியில் ஏறினேன். என்னுடன் ஆனைகுளம், குழலிகுளம், ரெகுநாதமடை ஊரை சேர்ந்தவர்கள் ஏறி சென்றோம். பனையூருக்கும் – சாமிநத்தத்திற்கும் இடையே சுமார் 4.00 மணியளவில் சென்றபோது, கிழக்கிலிருந்து மேற்காக வேகமாக வந்த லாரியானது பேருந்தின் முன்பக்கம் மோதியதில், எனக்கு

மூக்கில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த 20 நபர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது. காயம்பட்ட என்னையும், அதிககாயம் பட்ட நபரைகளையும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 4 நாட்கள் கழித்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். பேருந்தின் நடத்துனர் கீழே விழுந்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி**

1. பேருந்தில் எந்த பக்கம் சேதம் என்றும், லாரியில் எந்த பக்கம் சேதம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பேருந்தின் ஓட்டுநர், லாரியின் ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியாது. விபத்திற்கு முழு காரணம் யார் என்று எனக்கு தெரியாது. சொன்ன நாள் நேரத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.